★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 பங்குனி 8 ரபி-ஆகி 22 இதழ்: 39
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22-3-79

## பெற்ரோல் நிலையங்கள் சனி, ஞாயிறு மூடப்படும்?

(கொழும்பு)

பெட்ரோல் நிரப்பும் நிலையங்களை சனி, ஞாயிறு நாட்களில் மூடிவைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக அறியப்படுகின்றது.

உலக மார்க்கட்டில் எரிபொருள் விலையேற்றம் காரணமாகவும், உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் நிலைமை இருப்பதனாலும பெட்ரோலை அதிகமாக விரையமாகாமல் காப்பதற்காக பெட்ரோல் நிலையங்களை மூடிவைப்பதென அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

சூறாவளியால் பாதிக்கப்படும் பகுதிகளில் சூறாவளியால் பாதிக்கப்பட முடியாத கட்டிடங்களை கட்டுவதற்கான கொங்றீட் கற்களை தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. சூறாவளி பாதிப்பு புனர்நிர்மாணக்குழு நேற்று நீதி அமைச்சர் திரு. தேவநாய

[6-ம் பக்கம் பார்க்க]

### மெயில் பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்ட சம்பளப் பணம்

# கான்ஸ்டபிளை சுட்டுவிட்டு

# ரூபா 20 ஆயிரம் கொள்ளை!

## பூநகரிப்பகுதியில் துப்பாக்கி வாலிபர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

**பூநகரிக்கு சென்ற 'மெயில் பஸ்'ஸில் துப்பாக்கி முனையில் இரு இளைஞர்களால் சுமார் 20,000 ரூபாவை கொண்ட மெயில் பை கொள்ளையடிக்கப்பட்டதுடன். இச்சம்பவத்தின் போது இளைஞர்களை மடக்கி பிடிக்க முயற்சித்த இரு பொலிஸார்களில் ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானார்.**

கிளிநொச்சி தபால் நிலையத்திலிருந்து, சம்பளப் பணமான 20,000 ரூபா பஸ்ஸில் பூநகரி தபால் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது பரந்தனுக்கு 6 மைலுக்கு அப்பால் உள்ள குடமுறுட்டியில் இச்சம்பவம் நேற்றுக் காலை நடந்தது.

இதே பஸ்ஸில், ஆயுதங்கள் எதுவுமின்றி ஒரு சிங்கள பொலிஸ் கன்ஸ்டபிளும், ஒரு தமிழ் பொலிஸ் கன்ஸ்டபிளும், கடமைக்காக பூநகரிக்கு சென்றுகொண்டிருந்தனர். பஸ்ஸில், பெண்கள் உட்பட பிரயாணிகளும் இருந்தனர்.

காலை 8-30 மணியளவில், பஸ் குடமுறுட்டியில் சென்றுகொண்டிருந்த போது பஸ்ஸிலிருந்த இரு இளைஞர்கள் துப்பாக்கியையும் கிறிஸ் கத்தியையும் காட்டி 'நிற்பாட்டடா பஸ்ஸை' என்று கூறி ஞர்கள் உடனே யூனிபோமுடனிருந்த இரு பொலிஸாரும், பாய்ந்து சென்று இளைஞர்களை மடக்கி பிடிக்க முயன்றனர் என்றும் அப்போது இளைஞர் ஒருவர் கன்ஸ்டபிளை நோக்கி சுட்டதாகவும், அச்சூட்டினால், தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள் தர்மலிங்கம் என்பவர் காயமடைந்து விழுந்தாரென்றும் கூறப்படுகிறது.

உடனடியாக இரு இளைஞர்களும், 20,000 ரூபாவைக் கொண்ட 'மெயில் பையை'க் கைப்பற்றி, பஸ்ஸிலிருந்து குதித்து காட்டை நோக்கி ஓடினார்கள் என்றும் கூறப்படுகிறது.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததும், ஆயுதந்தாங்கிய பொலிஸார் அக்காடுகளில் பலத்த சோதனையிட்டனர். அப்பகுதியால் சென்ற வாகனங்கள் பலத்த சோதனைக்குள்ளாகியது. வீடுகளும் சோதனையிடப்பட்டது.

காடுகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்துவதற்குபொலிஸாரும் இராணுவத்தினரும் ஏற்பாடு செய்துள்ளனர் இதுவரை சந்தேகநபர் எவரும் கைதாகவில்லை.

கொள்ளையரைத் தேடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பொலிஸ் நாய் அனுப்பும்படி கோரப்பட்டபோதிலும்யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நாய் ஏற்கனவே சுகவீனமுற்றிருப்பதால் நாய் அனுப்பப்படவில்லை. (க)

## 'அமிர்' தம்பதிகளுக்கு புதுடில்லியில் வரவேற்பு

சென்னை, மார்ச் 21

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் இன்று சென்னையிலிருந்து புதுடில்லிக்குப் பயணமானார், அங்கும் அன்னருக்கு குதூகல வரவேற்பளிக்கப்பட்டது

புதுடில்லி விமானநிலையத்தில் அமிர்தம்பதிகளை இந்திய வெளியுறவு அமைச்சர் திரு வாஜ்பாய் வரவேற்றார், புதுடில்லியில் அமிர் தம்பதிகள் 24ம் திகதிவரை மத்திய அரசின் சார்பில் திரு வாஜ்பாயின் விருந்தினராக தங்கியிப்பார்.

இந்தியாவின் முதுபெருந்தலைவர்களான திரு சரண்சிங், திருமதி இந்திராகாந்தி ஆகியோரையும் இவர் சந்திப்பார் உடல்நிலை பாதிப்புற்றிருக்கும் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணனையும் அமிர்தம்திகள் நாளை மறுதினம் சென்று பார்வையிடுவர்

நாளைக்காலை திரு அமிர்தலிங்கம் பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயைச் சந்தித்து இலங்கைத் தமிழரது நிலைகுறித்து ஆராய்வார் வட இந்தியாவில் பல மாநிலங்களில் அமிர் தம்பதிகளைக்

[6ம் பக்கம் பார்க்க]

## ஜெயப்பிரகாஷ்: உடல்நிலையில் மாற்றமில்லை

[புதுடில்லி]

ஜெயப்பிரகாஷ் நாராயணன்உடல் நிலையில் மாற்றம் எதுவுமில்லை, என அவருக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

தீவிர சிகிச்சை அளிக்கபடுகிறது காய்ச்சலும் இரத்தக் கசிவும் இருக்கிறது இதயமும சுவாசப்பையும் சீராக இயங்குகின்றன அவர் மயக்க நிலையிலேயே இருக்கிறார்.

### வடபகுதி 4 கொள்ளைச் சம்பவங்கள்

# சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணவில்லை

## நீதிமன்றத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு

(கொடிகாமம் நிருபர். க. பொன்னுத்துரை)

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் நடந்த நான்கு கொள்ளைகள் தொடர்பாக நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில்பலத்த பாதுகாப்புடன் நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பு மத்தியில் பதில்நீதிபதி திரு கே. திரவியநாயகம் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நேற்றுக்காலை 10 மணி முதல் மாலை 4 மணி 25 நிமிடம் வரை நடைபெற்றது.

### 9 சந்தேகநபர்கள்

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுசங்க 8 0000 ரூபா கொள்ளை தொடர்பாகக் கைதான 8 சந்தேகநபர்களும புலோலி ப நோ கூ சங்க பெற்ரோல் நிலையக் கொள்ளை தொடர்பாகக் கைதான சந்தேகநபர் ஒருவரும் இந்த அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர்

### கண்டியிலிருந்து வந்தனர்

கண்டிசிறைச்சாலையிலிருந்து இரு பெரிய பொலிஸ் ட்ரக்குகளில் ஆயுதந்தாங்கிய பொலிஸ் பாதுகாப்புடன் மூடிமறைத்து சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். கண்டி, அனுராதபுரம பொலிஸாரின் பாதுகாப்பில் சந்தேக நபர்கள் கொண்டுவரப்பட்டனர்.

### நீதிமன்றத்தில் பாதுகாப்பு

சாவகச்சேரி நீதிமன்ற வளவைச் சுற்றி கண்டி, அனுராதபுரம். கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய

[6ம் பக்கம் பார்க்க]

## திருமண அழைப்பு

### புவனேந்திரன் -- குணசுந்தரி

நிகழும் பங்குனி மாதம் 9ம் திகதி (23-3-79) வெள்ளிக்கிழமை மாலை 6-17—7-47 வரையுள்ள சுபவேளையில் எனது சகோதரன் திருநிறைச் செல்வன் கோ. புவனேந்திரனுக்கும் 23/2 சிவப்பிரகாசம் ரோட் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 'முத்தையா ஆச்சரியாரின் மூத்த புதல்வி திருநிறைச் செல்வி மு. குணசுந்தரிக்கும் 'மகேச வாசா' ஆனைக்கோட்டையில் திருமணம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அவ்வமயம் சுற்றத்தாரையும் நண்பர்களையும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் பணிவுடன் வேண்டுகிறேன்.

கோ. புண்ணியவேலும்,
பாரியாரும்

'மகேச வாசா'
ஆனைக்கோட்டை.

1967

## வரி விளம்பரம்


### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1892

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor). Auto Electricians Certificate. Diploma In Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1891

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M. A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1959

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கியம், இலக்கணம் (Emma. Mc Beth, Poetry) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக்கொடுக்கப்படும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1962 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1962

### தேவை

பாண்வேலை தெரிந்தவர்களும் 'பிஸ்கட்' வேலைதெரிந்த பெண்களும் உடனடியாக தேவைப்படுகின்றார்கள். நேரில் தொடர்புகொள்ளவும். நியூ பாரத் பேக்கவுஸ் 86/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 1949

### விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரித்த டிரக்டர் பெட்டிகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1960


## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சோலைவரி – 1ம் கந்தாயம் 1979

1979ம் ஆண்டு 1ம் கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம் 02-04-79ந் திகதி பி. ப. 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக 10 வீத வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் சார்பில் தபாற் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல்வேண்டும். அத்துடன் வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்
யாழ்ப்பாணம்,
20-3-79 964

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 8-ம் திகதி

(22-3-1979)

வியாழக்கிழமை

**மேடம்:** வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும், நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேறப்படலாம், சிலருக்கு பொதுசனத் தலைமைக்கும் இடமேற்படலாம்.

**இடபம்:** செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், எதிர்பாராத இடைக்காலப் பிரிவுக்குமிடமேற்படும், வேவுக்களை தொடுப்பதற்கு எதிரிகள் முனைவர், கவனம் வேண்டும்.

**மிதுனம்:** பிரிந்தவர்கள் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு, குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும், பெற்றோர்கள் ஆதரவும் உண்டு.

**கடகம்:** நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்தி கிடைக்கும். தொழில் துறையிலும் மந்தநிலை காணப்படும், பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

**சிங்கம்:** உறவு முறைகள் பலப்படும், உற்சாகம் பெருகும். மூத்தோர்கள் உதவிக்கும் இடமேற்படும், பிதாவழிப் பெருமையும் உண்டு.

**கன்னி:** மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், புதிய தொழிலில் சிறப்புக்கிடமுண்டு, இடப்பிரிவுக்கும் இடமேற்படலாம்.

**துலாம்:** பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள், மக்களாலும் மகிழ்ச்சியுண்டு, திடீர் வரவுக்கும் இடமேற்படலாம், சகோதர சுகமும் உண்டு.

**விருச்சிகம்:** கழுகுப்பார்வை வட்டமிடும், காத்திருப்பர் பகைவர், திடீர் நெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நில்.

**தனுசு:** எதிலும் அவசர முடிவைத் தவிர்க்கவும், உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். பிரயாணத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

**மகரம்:** இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்து கொள்ளுவீர்கள், பொருள் துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

**கும்பம்:** வாகனச் சாரதிகளை நிதானத்துடன் இருக்கவும், உளைவு நினைவுகள் வேதனை தரும், மனத்திடம் மருந்தாகும்.

**மீனம்:** கருத்து வேற்றுமைகள் மறைவதற்கிடமுண்டு, தங்கள் திறமைக்கு முன் மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள், தாய்வழிச் செய்தியும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டி, வாரிசிமாவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா வயித்திலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்
கந்தையா வயித்திலிங்கம்
கைம்பெண் சிவசிதம்பரம்,
வாரிசிமா, அளவெட்டி,
மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்க இல. T/11

1. வயித்திலிங்கம் சிறிஸ்காந்தன்,
2. வயித்திலிங்கம் ஞானலிங்கம்,
3. செல்வராணி வயித்திலிங்கம் மகள்
4. வயித்திலிங்கம் தியாகலிங்கம்
5. வயித்திலிங்கம் வரதலிங்கம்
6. வயித்திலிங்கம் கணேசலிங்கம், பராயமடையாதோர்
7. வயித்திலிங்கம் மகள் செல்வமதி

பராயமடையாத இவர்கள்மூவரினதும் பாதுகாவலராக

8. கந்தையா இராமநாதன் எல்லோரும் வாரிசிமா, அளவெட்டி.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ஆம் ஆண்டு ஆனி மாதம் 1ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆர். ஜெயராஜசிங்கம்
[ஒப்பம்]
பதிவாளர்

1978-07-17 ஆந் திகதி என்னால் வரையப்பட்டது.

சு. நடராசா
[ஒப்பம்]
மனுதாரின் சட்டத்தரணி
1948

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் பலாலி வீதி, 37ஐச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்
சோமசுந்தரம் கைம்பெண்
மங்கையர்க்கரசி, இல 37,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் இல. 3432

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1979ம் ஆண்டு பங்குனி மாதம் 20ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது
1965

## "கிரிக்கெட் வர்ணனை தமிழில் வேண்டும்"

### யாழ். மத்தியகல்லூரி அதிபருக்கு திருக்குறள் முன்னணிக கழகம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளை மறுநாள் வரை யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் யாழ். மத்தியகல்லூரி — யாழ். புனிதபரியோவான் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின்போது நடைபெறவிருக்கும் நேர்முகவர்ணனை தமிழில் இடம்பெறவேண்டும்."

இவ்வாறு திருக்குறள் முன்னணிக் கழக பொதுச்செயலாளர் வண்ணை ஆனந்தன் யாழ், மத்திய கல்லூரி அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். திரு வண்ணை ஆனந்தன் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

"இன்று உலகெங்கும் ஏற்பட்டு வரும் தேசிய இனங்களின் விழிப்புணர்வை கல்விமானுகிய தாங்கள் நன்கறிந்திருப்பீர்கள். வளரும் இனங்களை மறுமலர்ச்சிக்கான புரட்சிகரமான மாறுதலை நோக்கிச் செல்லும் இக்கால கட்டத்தில் மாபெரும் வரலாற்றை கொண்ட தமிழினமும் மறுமலர்ச்சி காண எழுவது தவிர்க்க முடியாததாகும்.

"இக்காலகட்டத்தில் நம் இனத்தின் கல்விமான்கள ஆற்றவேண்டிய பணி கூறித் தெரிய வேண்டியதில்லை. மேலும் பாடசாலை வைபவங்கள எதிலும் மாணவரின் போதனுமொழியே இடம் பெறுவதே சர்வதேச மரபும் ஆகும் எனவே தாங்கள் இவ்விடயத்தில் தமிழினத்தின் மறுமலர்ச்சிக்கான அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே எம் அவாவாகும்." (கொக்: நிரு)

## காலி இடங்களை உடன் நிரப்ப அரசு முடிவு

(கொழும்பு)

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் உள்ள பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப அரசு தீர்மானித்துள்ளது.

சிறிய பதவிகள் அரசாங்க அதிபர்களின் ஆலோசனையின் பேரில் வேலைவங்கிகள் மூலமும் ஏனைய பதவிகள் கம்பூட்டர் மூலமும் நிரப்பப்படும். [இ]

## சிறுபான்மைத்தமிழர் மகாசபை மாநாடு ஏப்ரல் 29-ல் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 34 வது வருடாந்த மகாநாடு ஏப்ரல் மாதம் 29ம் திகதி நடைபெறும்.

முன்னாள் நியமன எம். பி. யும் தலைவருமான திரு. எம். சி சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இம்மகாநாட்டை சிறப்பாக நடத்துவதென்றும் மகாநாட்டிற்குப் பல்வேறு அரசியற் கட்சித்தலைவர்களையும் அழைப்பதென்றும் கலாநிதி டபிள்யூ தகநாயக்கா, இ. தொ. கா., இளைஞர்பேரவையினர் முதலானோரையும் அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இம்மகாநாடு முழுநாளும் இடம்பெறுமென்றும் புதிய உத்தியோகத்தர் தெரிவுகள் இடம்பெற்றபின்னர் மாலையில் மகாநாட்டுக்கென அழைக்கப்படும் பிரதிநிதிகளின் சொற்பொழிவுகள் இடம்பெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் இம்மகாநாடு நடைபெறும். மகாசபையில் நீண்டகாலமாக அங்கத்துவம் வகித்து சிறுபான்மைத் தமிழருக்காகப் பாடுபட்ட தலைவர்களைக் கௌரவிக்கும் முகமாக விசேடமலரொன்றும் வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது மகாநாட்டு ஒழுங்குகளைக்கவனிப்பதற்கும், மலர் வெளியீட்டிற்குமாக குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

## அலங்காரத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை ஆத்திப்புலம் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 16-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது எதிர்வரும் 25-ம் திகதி சங்காபிஷேகமும் 27-ம் திகதி வயிரவர் அபிஷேகமும் நடைபெறும்.

## கரபந்தாட்ட போட்டி

வல்வெட்டித்துறை தொற்றுவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தின் நேருஞ்சாஸ் விளையாட்டுக்கழகம் அகில இலங்கை ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தவிருக்கிறது.

பங்குபற்றவிரும்புவோர் 31-3-79க்கு முன்னர் விளையாட்டுக்கழகச் செயலாளருடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (கு)


## பிறந்ததின வாழ்த்து



செல்வி. ம.சிவசுதா

ஆனைக்கோட்டை சுதுமலை தெற்கைச் சேர்ந்த மகேந்திரன் வவாமணி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி சிவசுதா தனதுஇரண்டாவது பிறந்ததினத்தை இன்று22 3- 79 வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார் இவர் நலன் பல பெற்று பல்லாண்டு சிறப்புறவாழ அப்பா, அம்மா, மாமாமார், மாமிமார், அங்கிள், பெரியப்பா, பெரியம்மா மற்றும் உறவினர் வாழ்த்துகின்றனர்.

1963

# மக்கள் கருத்து

## வடமாநிலக் கல்வித் திணைக்களம் கவனிக்குமா?

வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினுல் பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

வகுப்புக்களில் தொழில் முன்னிலைக்கல்வி, சமூகக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய முக்கிய பாடங்கள் பற்றிய விளக்கங்கள், பாண்டியத்தியம் பெற்ற கல்வித்திணைக்களக் கல்வி ஆலோசகர்களால் பாடசாலை ஆசிரியர்களுக்கு அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதில் பங்கு பற்றும் ஆசிரியர்களுக்குப் பல புதிய விஷயங்கள், பாடத்திட்ட மாற்றங்கள், கற்பித்தல் முறைகள் போன்றவைபற்றி அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனுல் ஆசிரியர்களிலும்பார்க்க அவர்களாற் போதிக்கப்படும் மாணவர்களே பெரிதும் பயனடைகின்றனர். குறிப்பாக இவ்வாண்டு 6ம் 9ம் வகுப்புகளுக்கான பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. எனினும் அவற்றுக்கான வழிகாட்டிகளோ, பாடப் புத்தகங்களோ இதுவரை வெளிவரவில்லை. மாற்றப்பட்ட பாடவிதானங்களின் தலையங்கங்கள் மாத்திரமே கல்வி அமைச்சினல் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றை வைத்துக்கொண்டு ஆசிரியர்கள் திறமையாகச் செயற்பட முடியாது. இந்தச் சூழ்நிலையில் கல்வித்திணைக்களம் நடாத்தும் சேவைக்காலப் பயிற்சிவகுப்புகள் மாணவர்களைச் சரிவர நெறிப்படுத்த ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவும்.

இருந்தபோதிலும் யாழ்ப்பாணத் தொகுதியிலுள்ள சில பாடசாலை அதிபர்கள் இத்தகைய கருத்தரங்குகள், வகுப்புகள் சம்பந்தமான கல்வித் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளை ஆசிரியர் கண்களுக்குப்படாமல் மறைத்தும் ஆசிரியர்களுக்குக் கடமை லீவு வழங்கி இவற்றில் பங்குபற்ற அனுமதி மறுத்தும் வருகின்றனர்.

இந்தநிலை மாறி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நடாத்தப்படும் இவ்வகுப்புகளில்சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களும் பங்கு பற்றுவதற்கான நடவடிக்கையினை வடமாநிலக்கல்வித்திணைக்களம் எடுக்குமா?

—ஓர் ஆசிரியன்.

யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

## கொக்குவில் தபால்நிலையம்

கொக்குவில் தபாற்கந்தோரில், பல விதமான சீர்கேடுகளால் பொதுமக்கள் பாதிப்படைந்துவருகிறுர்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். அதாவது, இக்கந்தோரில் தபால் விநியோகம் செய்கின்ற ஒரு தபாற்சேவகர், நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்கள் அடங்கிய தபாற்கட்டு ஒன்றை ஓர் பற்றைக்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளார். இத்தபாற்கட்டைக் கண்டெடுத்த ஒருவர் அதைத் தபால்நிலையத் தலைவரிடம் ஒப்படைத்துள்ளார். இது விஷயம் குறித்துத் தற்பொழுது வடபெரும்பாகத் தபால் அத்தியட்சகர் விசாரணை செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

இதுமாத்திரமல்ல, முத்திரை வாங்குவதற்குச் சென்ருல் முத்திரை விற்கும் பகுதியில் சுமார் ஒரு மணித்தியாலம் காவல் நிற்கவேண்டியுள்ளது. தனியொருவர் இப்படிக் காவல் நிற்பதல்ல. பலர் இப்படியாகக் காத்துநிற்பதைக் காணலாம். இவர்கள் பொறுமையை இழக்காது! நின்றுலுங்கூட, குறிப்பிட்ட முத்திரை விற்பவர் சீறிச்சினந்து ஏசித்தான் முத்திரையைத் தருவார். காரணம் யாதோ நாமறியோம்.

அந்த உத்தியோகத்தர் தொலைபேசியில் தொடர்ந்து அரை மணித்தியாலத்திற்கு மேலாகக் கதைத்துக்கொண்டிருப்பார். யாருடன்தான் அப்படிக் கதைக்கிருரோ! பின்னர் மனமில்லாத வகையில் நிறுத்திவிட்டு, முத்திரையைக் கொடுக்கத் தொடங்குவார். அப்போது பொதுமக்களுடன் கோபமாகச் சீறிச்சினந்துதான் நடந்துகொள்ளுவார். ஏனோ தெரியவில்லை.

சில நாட்களில் கந்தோர்க் கதவு 7-30 மணிக்குத் தான் திறக்கப்படுகிறது. காரணம் புரியவில்லை. காலை 7 மணிக்குக் கதவு திறக்கவேண்டியது தான் இக்கந்தோரில் ஒழுங்குமுறை. ஏன்தான் இந்த ஒழுங்குமுறை பிறழ்கின்றதோ தெரியவில்லை.

இந்த நிலைமைகள் மாறுமா?

வே. பரமநாதன்

கொக்குவில்.

## வீதிக்கும் சாதிப்பெயர்தாஞ?

அண்மையில் யாழ்ப்பாணம் மின்சாரசபைக்குச்சென்றேன். "விரேசன் லேனில் மின்குமிழ்கள் எரிவதில்லை" என்றேன். அதற்கு, அங்கு நின்ற ஊழியர் ஒருவர், 'பா பர் லேனிலா? என்று கேட்டார். சாதிப்பெயரைச் சொல்லுல்தாஞ அவர்களுக்கு விஷயம் புரியும்?

'சாதி ஒழிந்து விட்டது! சாதி ஒழிந்து விட்டது!! என நாக்கிழியக் கத்துகிறுர்களே, அவர்களுக்கு இச்சம்பவம் சமர்ப்பணம்.

தமிழ்ச் சமுதாயத்தில் சாதி அமைப்பு நீறுபூத்தநெருப்பாகத் திகழ்கின்றது. ஊழியர் சொன்ன பதில் என் உள்ளத்தைச் சுட்டுவிட்டது. யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள, யாழ் மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட அமைப்புக்களில் இக்குறைபாடு இருப்பது கண்டிக்கத்தக்கது இதன் மூலம் யாழ் மாநகரசபை ஆணையாளரைக் கேட்டுக் கொள்வது—

● யாழ்ப்பாணத்திலுள்ள சாதிப்பெயர் சூட்டும் சகல வீதிகளும் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்

● சாதிவெறி காட்டும் சகல அரச ஊழியர்களும் கடுமையாக க[த]ண்டிக்கப்பட வேண்டும்.

சூ. இராசையா.

ஸ்ரேசன்வீதி,
யாழ்ப்பாணம்.

## நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

இவ்வருடத்திற்கான மருந்தவகைகளைப் பெறுவதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள பின்வரும் அரசினர் வைத்தியசாலைகளுக்கு யாழ் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் ஒதுக்கியுள்ள நிதி விபரம் வருமாறு:-

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை - 59 ஆயிரம் ரூபா, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை- 59 ஆயிரம் ரூபா, சங்கானை அரசினர் வைத்தியசாலை- 76 ஆயிரம் ரூபா, காரைநகர் அரசினர் வைத்தியசாலை - 81 ஆயிரம் ரூபா, தொல்புரம் அரசினர் மருந்துச்சாலை - 8 ஆயிரம் ரூபா, வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்துச்சாலை- 9 ஆயிரம் ரூபா. [அ]

### வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு

# வேலைமீண்டும்வழங்காவிடில் நேரடிப் போராட்டம்!

## வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற மாணவர்களின் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நாட்களின்போது பாடசாலைக்குச் செல்லவில்லை என்று காரணம் காட்டி வேலைநீக்கம் செய்திருந்த ஆசிரியர்களில் இதுவரை வேலை வழங்கப்படாதவர்களுக்கு ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு முன் வேலை வழங்குமாறும் இல்லையேல் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவதென்றும் தீர்மானித்துள்ளது.

இதுசம்பந்தமாக மேற்படி வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பெப்ரவரிமாதம் 1ம் திகதி தொடக்கம் 7ம் திகதி வரை நடைபெற்ற மாணவர்களின் பாடசாலைப் பகிஷ்கரிப்பு காலத்தில் வேலைக்கு செல்லாதவர்கள் என்று காரணம் காட்டி வேலைநீக்கம் செய்யப்பட்ட வடபிரதேச ஆசிரியர்களில் 130க்கு மேற்பட்டவர்களுக்கு இதுவரை மீண்டும் வேலைவழங்கப்படவில்லை.

"இப்பகிஷ்கரிப்பில் ஆசிரியர்களை ஈடுபடும்படி மாணவர்களது இயக்கமோ வேறெந்த ஸ்தாபனங்களோ கேட்கவில்லை. எந்தஆசிரியர்தொழிற்சங்கங்களும் பகிஷ்கரிப்பை மேற்கொள்வதாகவோ ஆதரிப்பதாகவோ அறிவிக்கவில்லை. இவ்வாறிருக்க இதனை ஒரு சாட்டாக வைத்து ஆசிரியர்களின் உரிமைகளை நசுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை வடமாகாண தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி ஏற்கனவே கண்டித்தது.

"வைத்திய காரணத்திற்காகவும் வேறுமுக்கியகாரணங்களுக்காகவும் லீவில் நின்றவர்களுக்குக்கூட மீண்டும் வேலை வழங்கப்படவில்லை இது அரசாங்கத்தின் மிகப்பாரதூரமான ஆசிரியர் சமுகத்திற்கு எதிரான நடவடிக்கையாகும். உடனடியாக மேற்படி ஆசிரியர்களை சேவையாற்ற அனுமதிக்கவேண்டும். ஏப்ரல் மாதம் 1ம் திகதிக்குமுன் இப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் சம்பந்தப்பட்டஆசிரியர்களையும் தொழிற்சங்கங்களையும் ஒன்று கூட்டி இச்செயலுக்கு எதிரான நேரடிப் போராட்டத்தில் குதிக்க வேண்டும்".

### நாயன் மார்கட்டு

# அரசடி விநாயகருக்கு அலங்காரத் திருவிழா

-- சொக்கன் --

யாழ்ப்பாணத்திலே தமிழரசர் ஆட்சிபுரிந்தபொழுது யாழ்ப்பாணத் தலைநகராக நல்லூர் சிறப்பும் பெற்று விளங்கியமைபோலவே அதனைச் சூழ்ந்திருந்த ஊர்களும் புகழார்ந்து விளங்கின. இவ்வூர்களிலே நாயன்மார்கட்டும் ஒன்ருகும்.

நல்லூரின் மிக அண்மையிலுள்ள இச்சிற்றூரிலே அன்றும் இன்றும் சைவமும் தமிழும் இரு கண்களாகப் போற்றப்பட்டுவருகின்றன நாயன்மார்கட்டிலே கனகரத்தினம் வீதியில் தெற்குத்திசைநோக்கி நாயன்மார் வீதியிலே - இருநூறு யார் தூரம் நடந்து சென்ருல் மருதநிலச் சூழலில் தாமரைக்குளம் ஒன்று அமைந்திருக்கக் காணலாம் இந்தக் குளத்தின் மேற்குப் புறமாகப் பழைமையான விநாயகர் ஆலயம் ஒன்று உள்ளது. அரசடி விநாயகர் கோயில் எனப் பெயர்கொண்ட இவ்வாலயம் நல்லூரினை இராசதானியாக்கி ஆட்சிபுரிந்த தமிழரசர்களுள் ஒருவனுன பரராசசேகரமகாராசாவினுல் கட்டப்பட்டதாகும். பரராசசேகரமகாராசாவின் மருகரான அரசகேசரி என்ற கவிவாணர் அரசடிப் பிள்ளையாருக்கென அமைக்கப்பட்ட தீர்த்தக் குளத்தின் வடசாரிருந்த மாடிவீடொன்றில் அமர்ந்திருந்து இரகுவமிசத்தைத் தமிழிலே கவிதையாக்கிப் பாடினுர் என்பர்.

நாயன்மார் அறுபத்துமூவருக்கும் குருபூசை நிகழ்த்துவதற்கென அமைக்கப்பட்ட திருமடம் அண்மைக்காலம் வரை இங்கிருந்தமையால் நாயன்மார்கட்டு என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற இவ்வூரிலே அரசடி விநாயகரின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடங்கியுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

ஓங்காரத் துட்பொருளே
உள்ளொளிரும் மெய்ப்
பொருளே
ஆங்காரத் தாரறியா
ஆரமுதே - ரீங்கார
வண்டணைதார் மார்ப!
வளமார் அரசடியார்
கண்டணைந்த கற்பகமே கா.

## சுழிபுரம் பத்திரகாளி பொங்கல்

[சுழிபுரம்]

சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவில் பொங்கல் வழிபாடு எதிர்வரும் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது விளக்கேற்று வைபவம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விளக்கேற்று வைபவத்தை தொடர்ந்து தினமும் மாலையில் சமய விரிவுரைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று முதல் இரவு 7 மணிக்கு சமயப்பிரசாரகர் வட்டூர் சி மருதபிள்ளை ஆசிரியர் 'அபிராமியந்தாதி' தொடர்விளக்கவுரை நிகழ்த்துவர் இவ்வாலயத்தில் பலியிடும் வழக்கம் முற்ருக நிறுத்தப்பட்டு பொங்கல் பூசை மட்டுமே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. [அ]

## தவக்கால நற்சிந்தனை

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டு எங்கள் இதயங்களிலே பிரகாசித்தார்."

(2 கொரிந்தியர் 4 : 6)

நாம் தேடும் ஞான ஒளி உலக இருளை போக்கும் பேரொளி. பல ஆயிரம் ஆண்டுகளாக எண்ணி எண்ணி, ஏங்கி, ஏங்கி, என்று வருமோ அந்தப் பேரின்பப் பெருஞ்சுடர் என்றெல்லாம் எண்ணி லடங்கா மாந்தர் வேண்டுதல் செய்துகொண்டபோது வாராது வந்த மாமணியாய் உதித்த அருள்நிறை ஞான ஒளி கிறிஸ்துநாதரின் கருணை ஒளியாகும் அந்த ஒளியின் வழிச்சென்ருல் நமக்கு இன்னல் ஏது? இடுக்கண் ஏது? எதிர்த்துவரும் பகை ஏது? பயம் ஏது?

—ஞானஒளி

தொகுப்பு : வில்பிறெட்

## பரிசு பெற்ற நாடகங்கள்

[பண்டத்தரிப்பு]

இணுவில் ஸ்ரீ கலைக்கதிர் இளைஞர் ஒன்றியம் அண்மையில் நடாத்திய யாழ். மாவட்ட நாடகப் போட்டியின் இறுதித் தேர்வுப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது வெற்றிபெற்ற நாடகங்களின் விபரம் வருமாறு:-

சமூக நாடகங்கள்- பெரியவிளான் இலங்கேஸ்வரி இளைஞர் நாடகமன்றத்தின் 'நல்ல சூடு', திருநெல்வேலி யாழ். ஸ்ரீ பாரத் நாடகமன்றத்தின் 'பாசப் புயல்', ஏழாலை முத்தமிழ் நாடகமன்றத்தினர் அளித்த 'புதிய பாதை'.

சரித்திர நாடகங்கள்- சங்கானை மேற்கு முத்தமிழ்க் கலாமன்றத்தின் 'சூழ்ச்சி', இணுவில் கலா நாடகமன்றத்தின் 'செந்தாமரை', இணுவில் மதி ஒளி நாடகமன்றத்தின் 'அரிச்சந்திர மயான

(4-ம் பக்கம் பார்க்க)

# ஜெருஸலம் பிளவுபடுவதை அனுமதிக்கமுடியாது
# பாலஸ்தீனதனிராஜ்யத்திற்கும் அனுமதி இல்லை
— இஸ்ரேல் பிரதமர்

## பெகினின் பேச்சு நல்ல சூழ்நிலையை கெடுக்கிறது
— எகிப்து பிரதமர்

ஜெருஸலம், மார்ச். 21

ஜெருஸலம் பிளவுபடுவதை இஸ்ரேலிய அரசு ஒருபோதும் அனுமதிக்காது. எந்தக்கால கட்டத்திலும் காசா, ஜோர்தான் ஆற்றுக் கரைப் பிரதேசங்களில் பாலஸ்தீன ராஜ்யம் அமைக்கப்படுவதையும் இஸ்ரேல் அனுமதிக்காது என்று இஸ்ரேலிய பிரதமர் திரு, பெகின் தெரிவித்துள்ளார்.

திரு. பெகினின் இப்பேச்சு மத்திய கிழக்கில் எகிப்து-இஸ்ரேல் உடன்பாடு ஒன்று ஏற்படக்கூடியதாக உருவாகியிருந்த சூழ்நிலையை கெடுத்துவிட்டது என்று எகிப்திய பிரதமர் ஜனப் கலீல் தெரிவித்துள்ளார்.

திரு பெகின் பாராளுமன்றத்தில் பேசுகையிலேயேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

இஸ்ரேலியப் படைகள் எக்காரணம் கொண்டும் 1967ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த எல்லைகளுக்குத் திரும்பிச் செல்லமாட்டாது என்றும் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

### காம்ப்டேவிட் இணக்கத்திற்கு நேர்விரோதம்

பிரதமர் திரு. பெகினின் பேச்சுக்கள் மத்திய கிழக்கு அமைதிகுறித்த காம்ப்டேவிட் இணக்கத்திற்கு நேர்விரோதமாக உள்ளது என்று எகிப்திய பிரதமர் ஜனப் கலீல் தெரிவித்துள்ளார்.

### பாலஸ்தீனர்களின் உரிமைக்கு உத்தரவாதம்

பாலஸ்தீனமக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதுடன், கிழக்கு ஜெருஸலம் உட்பட கைப்பற்றப்பட்ட அரபுமண்ணிலிருந்து 1967ம் ஆண்டுக்கு முன்பிருந்த எல்லைகளுக்கு இஸ்ரேல் திரும்பிச் சென்றபின்னரே எகிப்து இஸ்ரேல் ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்றும் ஜனப் கலீல் தெரிவித்துள்ளார். (இ)

### 'வித்தி'க்கு யாழ். முஸ்லிம்கள் பாராட்டு

[கொக்குவில்]

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு யாழ் மாவட்ட முஸ்லிம்கள் பாராட்டுவிழா நடாத்தவுள்ளனர்.

இம்மாதம் 24-ந் திகதிமாலை நடைபெறும் இவ்விழாவில் பிரபலமுஸ்லிம் கல்விமான்களும் பேராசிரியர்களும் கலந்து கொள்ளுவர்.

யாழ்ப்பாணம் உஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இப்பாராட்டுவிழா வைபவத்தைத் தொடர்ந்து ஜனப் எம். முத்துராஜா தேநீர் விருந்துபசாரமளித்து கௌரவிப்பார்.

### 'அரிசி ஏற்றுமதிக்கு போதியளவு கையிருப்பு இல்லை'

புதுடில்லி, மார்ச். 21

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்ய கையிருப்பில் போதியளவு அரிசி இல்லை என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் ஆந்திரப் பிரதேச முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யலாம் என ஆந்திர அரசு மத்திய அரசிடம் அறிவித்ததை அடுத்தே பிரதமர் மேற்கண்டவாறு கடிதம் எழுதியுள்ளார். (இ)

## பூட்டோவுக்கு மரணதண்டனை விதித்தால்—
# பாகிஸ்தானில் உள்நாட்டு யுத்தம் ஏற்படும்!
### மூத்தபுதல்வர் எச்சரிக்கிறார்

லண்டன், மார்ச். 21

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலி பூட்டோவுக்கு மரணதண்டனைவிதிக்கப்பட்டால் பாகிஸ்தானில் உள்நாட்டு யுத்தம் ஒன்று ஏற்படும்.

இவ்வாறு ஜனப் பூட்டோவின் மூத்தமகன் ஜனப் நீர் பூட்டோ லண்டனில் தெரிவித்துள்ளார்.

சிறையிலிருந்து கொண்டு ஜனப் பூட்டோ எழுதிய 'நான் படுகொலை செய்யப்பட்டால்' என்ற புத்தக வெளியீடு தொடர்பாக லண்டனில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றிலேயே பூட்டோவின் மகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவரான ஜனப் நீர் பூட்டோ நிருபர்கள் மத்தியில் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

#### மன்னிப்புக் கோரமாட்டோம்

எனது அப்பாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு நானோ எனது குடும்பத்தினரோ பாகிஸ்தான் இராணுவ அரசைக் கேட்டதுமில்லை; இனிமேலும் கேட்கமாட்டோம்.

அப்பாவின் மரணதண்டனை மீளாய்வுமனுவின் தீர்ப்பு அப்பாவுக்குச் சாதகமாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

ஜனப் பூட்டோ எழுதிய 'நான் படுகொலை செய்யப்பட்டால்' என்ற நூல் இன்று லண்டனில் வெளியிடப்படுகிறது. (இ)

நெருக்கடிகால அத்துமீறிய செயல்:

## கமிஷன்முன் ஆஜராகுமாறு மீண்டும் இந்திராவுக்கு உத்தரவு

புதுடில்லி, மார்ச். 21

மணிப்பூரில் நெருக்கடி கால அத்துமீறிய செயல்களைகுறித்து விசாரணை செய்துவரும் கமிஷன் முன் ஆஜராகுமாறு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு 2வது தடவையாக உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாதம் 19ம் திகதி கமிஷன் முன் ஆஜராகுமாறு திருமதி காந்திக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தும் அவர் கமிஷன்முன் ஆஜராகவில்லை. (இ)

## ஜே. பிக்கு 4 போத்தல் இரத்தம் ஏற்றப்பட்டது
### சீரற்ற இதயத்துடிப்பு

பம்பாய், மார்ச் 21

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு நேற்று 4 போத்தல் இரத்தம் ஏற்பட்டது என்றும் உடல்நிலை கவலைக்கிடமாகவே உள்ளது என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதயத்துடிப்பு சீரற்றுக் காணப்பட்டபோதிலும் அவர் நினைவுடனேயே இருந்தார் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

கடந்த இரவுசுமார் நாலரை மணி நேரம் வரை அவரது சிறுநீரகத்தில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### பரிசு...

(3ம் பக்கத் தொடர்ச்சி) காண்டம்'.

சுதுமலை நாமகள் கலாமன்றம் தயாரித்து அளித்த 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் நடித்த 'முட்டாள் முடியரசன்' என்ற நாடகத்திற்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. (அ)

### ஈரானுக்கு இந்தியா பாராட்டு

புதுடில்லி, மார்ச் 21

மண்டலசார்பற்ற நாடுகள் அணியில் சேர ஈரான் முன்வந்தமைக்கு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (இ)

சென்னை நீதிமன்றங்களை

## வழக்கறிஞர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

சென்னை, மார்ச் 21

சென்னையில் வழக்கறிஞர்கள் இன்று ஐந்தாவது நாளாக நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்தனர்.

மூடப்பட்ட சென்னை சட்டக்கல்லூரியை உடன் திறக்குமாறும் மதுரையில் வழக்கறிஞர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நீதிமன்ற விசாரணை நடத்துமாறும் தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரியை வேலையிலிருந்து நீக்குமாறும் கோரியே வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களை பகிஷ்கரித்து வருகின்றனர்.

#### கவர்னரிடம் புகார்

இதேவேளையில் வழக்கறிஞர்கள் குழு ஒன்று தமிழக கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரியிடம் தமது நிலைகுறித்து புகார் செய்துள்ளது. இது தொடர்பான மகஜர் ஒன்றையும் அவர்கள் திரு. பட்வாரியிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதே வேளையில் சென்னை நகரில் விதிக்கப்பட்டிருந்த பொலிஸ் தடையை மீறியதாக 74 சட்டக்கல்லூரி மாணவர்கள் கைசெய்யப்பட்டனர். (இ)

### நல்லியல்புகள் பெற்ற ஒரு நல்லாசிரியர்



அறிவு, ஆற்றல், திறமை மட்டுமல்லாமல் அன்பு, அடக்கம், பொறுமை முதலிய நல்லியல்புகள் யாவும் அமையப்பெற்ற நல்லாசிரியராகவிருந்து தமது திறமையாலும் ஒப்பற்ற சேவையாலும் அதிபராக உயர்ந்து வசதியற்ற மாணவர்கள் பலருக்கு தமது கிராமத்தில் மட்டுமன்றி ஏனைய கிராம மாணவர்களுக்கும் கல்விச் செல்வத்தை வாரி வழங்கியவர் அமரர் தம்பிப்பிள்ளை.

ஆசிரியத் தொழிலில் இருந்தபோதிலும் தன்னுடைய சமூகத்துக்கும் சமயத்துக்கும் அரும்பணி புரிந்தார்.

"நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க் கல்லால் அரிது" என்ற வள்ளுவரின் வாக்குப்போல அமரர் தம்பிப்பிள்ளையின் அருந்தொண்டு; புகழ் ஒளி வீசி எல்லோர் உள்ளங்களிலும் என்றும் ஓங்கி நிற்கிறது.

அமரர் தம்பிப்பிள்ளையைப் போன்ற கடமையுணர்ச்சி நிரம்பிய ஆசிரியர் பரம்பரை இப்பொழுது அருகிக்கொண்டு போகிறது. அன்னாரின் திடீர் மறைவு கல்வித்துறைக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்."

இவர் ஞானசாரிய கல்லூரி, புலோலி வேலாயுதம் பாடசாலை, தொண்டமானாறு மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி தொண்டாற்றினார்.

—ஒரு மாணவன்

### விளையாட்டுக்கள் ஐக்கியத்தை வளர்க்கும்

[யாழ்ப்பாணம்]

விளையாட்டின் மூலம் சமூக குறைபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் ஒழித்து ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கலாம். அதற்கு உதாரணமாக இக்கிராம மக்களின் ஒற்றுமையே எமக்குத் தெளிவாக்குகின்றது.

இவ்வாறு நவிண்டில் சக்தி விளையாட்டுச்சழகம் நடாத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தொடர்ந்து மூன்று முறைகள் வெற்றியீட்டி வெள்ளிக்கேடயத்தை தமக்குச் சொந்தமாக்கிக் கொண்ட கொற்றுவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தினர் தமது விளையாட்டுக் கழக வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் ஏற்பாடு செய்திருந்த தேநீர் விருந்துபசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கட்டைவேலி, உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஆ. தம்பையா கூறினார்.

கழகத் தலைவர் திரு கி. பூபாலன், பி. சிவபாதம், க. வேலும்மயிலும், கொற்றை கிருஷ்ணானந்தன், த கணேசமூர்த்தி ஆகியோர்களும் உரையாற்றினர்.

இறுதியில் கழகத்தின் இணைச்செயலாளர் திரு. ஜே. ஜெகதீஸ்வரன் நன்றியுரை வழங்கினார். (கு)

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
கல்யாணியின் கணவன்

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
KARATE CALLAN

## "மக்கள் இலக்கியம்" சஞ்சிகைவெளியீடு

[யாழ்ப்பாணம்]

மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் வெளியீடாக 'மக்கள் இலக்கியம்' என்னும் பத்திரிகை மாதந்தோறும் வெளிவரவுள்ளது. இந்நாட்டுநச்சு இலக்கிய குப்பைகளுக்கும் இறக்குமதியாகும் தரங்கெட்ட கலை இலக்கிய ஆபாசகுப்பைகளின் ஆதிக்கத்திற்கும் எதிராகக் கணைதொடுக்கும் இதழாக இப்பத்திரிகை வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உழைக்கும் மக்கள் தினமான மே தினத்தன்று இப்பத்திரிகை வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

12-வது வாரம்
வின்ஸர் [யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ் நகர்]
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடி வாழை

REGAL (Jaffna)
2nd CROWDED WEEK
Daily 4 Shows
2-00, 4-30,
7 00 & 9-30 p.m only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30&9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30
6-30 & 9-45
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
குமுதம்
(புதிய பிரதி)

லிடோ [யாழ்.நகர்]
போன்: 7638 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

Shanthi
(Jaffna Phone- 7642).
10-30, 4-45, 7-00 & 9-30
Today only
"The Gipsy Camp Vanishes into The Blue"
—Cinemascope— —Color—
From 23-3-79
KUCHE. DAAG — Hindi (Eastman color)

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15&9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி
(கலர்) (புதிய பிரதி)

மனோகரா [யாழ்நகர்]
இன்றுமட்டும் தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-பத்மினி
மீண்ட சொர்கம்
[புதிய பிரதி]

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள் இன்றுமட்டும்
சிவாஜி-தேவிகா நடித்த
அன்னை இல்லம்
[புதிய பிரதி]
23-3-79 முதல் சிவாஜி-விஜயா எதிரொலி

# 'ஆங்கில ஆட்சியில் ஒற்றுமையாயிருந்த தமிழ், சிங்களமக்களிடையே இன்றுவேற்றுமை

[சித்தன்கேணி]

ஆங்கிலேயர் ஆட்சியில் ஒற்றுமையாகியிருந்த சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இன்று தமக்குள் ஆயுதம் ஏந்திபோராடக் கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 1948ம் ஆண்டுக்குப்பின்பு மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஐக்கியதேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பெரும்பான்மை இனத்தவர்களாகிய சிங்கள மக்களை பல தந்திரங்களைக் கையாண்டு தம்பக்கம் வைத்திருந்து ஆட்சியையும் நடாத்தி தமிழ் மக்களையும் சிங்களமக்களையும் பிரித்து வைத்திருக்கின்றது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணிப் பிரமுகர் திரு ஜி. எஸ். பொன்சேகா சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

கழகமுன்றலில் கழகத் தலைவர் செல்வன் ஆர். சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நமது நாட்டை ஆட்சி செய்த அரசுகள் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கி மொழிரீதியிலும், பௌத்த மதத்தை அரச மதமாக்கி மதரீதியிலும், சிங்கள மாணவர்களுக்கு பல்கலைக்கழக தெரிவில் முன்னுரிமை அளித்து தரப்படுத்தல் ரீதியிலும் இன்று இரு இனமக்களையும் பிரித்துவைத்து ஆட்சியை நடாத்தி வருகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் போல ஆட்சியை நடாத்தாமல் இரு இனமக்களையும் சமமாக நடாத்திவரும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். சகல மக்களினதும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே எமது நோக்கம். பலாத்காரமாக ஒருபோதும் மக்களை இணைக்கவும் மாட்டோம். அவர்கள் பிரிந்து செல்லவிரும்பினால் அதை எதிர்க்கவும் மாட்டோம்.

திரு. பொன்சேகா தமிழில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## குடும்பத்தகராறு: கத்திக்குத்தில் முடிந்தது

[மாவிட்டபுரம்]

குடும்பத்தில் நிலவிய பிரச்னையால் மாமன் மருமகனுக்குக் கத்தியால் குத்தி படுகாயம் விளைவித்தாராம். கத்திக்குத்துக்கிலக்கான மருமகன் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். மாமனைத் தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.

இச்சம்பவம் வசாவிளானில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தில் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு அது தகராறாக வளர்ந்தபோது செல்லையா குணபாலச்சந்திரன் என்னும் தமது மருமகனுக்கு சுப்பையா பொன்னுத்துரை என்னும் அவரது மாமனார் முதுகில் கத்தியால் குத்தி படுகாயப்படுத்திவிட்டு தலைமறைவாகிவிட்டாராம். காயமடைந்த நபர் உடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான மாமனைத் தேடி காங்கேசன்துறை பொலிசார் வலை விரித்துள்ளனர்.

## இலக்கியப்பெருமன்ற நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் விஸ்தரிப்புக்கூட்டம் யாழ் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் திரு கே. டானியல் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுச்செயலாளர் திரு. கே. டானியல் நிர்வாகச் செயலாளர் திரு. வி ரீ இளங்கோவன் பொருளாளர் திரு. நல்லை அமிழ்தன் திரு. என். கே. ரகுநாதனின் தலைமையின் கீழ் திருவாளர்கள் நந்தினி சேவியர் பொன் பொன்ராசா பாஷையூர் தேவதாசன் செல்வ பத்மநாதன் கே சிவராசா ஆகியோரைக் கொண்ட பத்திரிகைக் குழுவொன்றும் பதினொரு பேரைக் கொண்ட நிருவாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

வெஸ்லி
(கரணவாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-பத்மபிரியா
உறவு சொல்ல ஒருவன்

## "தமிழ்ப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சங்கம்"

[யாழ்ப்பாணம்]

தமிழ்ப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு தனியான மொழி வழித்தொழிற் சங்கம் ஒன்றை அமைக்க தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணி நடவடிக்கை எடுத்துள்ளது.

தொகுதிகள் தோறும் நியமிக்கப்பட்டிருக்கும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களை ஒரே சங்கத்தில் சேர்க்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 31-ந் திகதி "தமிழ்ப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் சங்கம்" தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி.யினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணி நிர்வாகச் செயலாளர் திரு. சு. தர்மலிங்கம் மேற்கொண்டு வருகின்றார்.

## யாழ். ஆஸ்பத்திரியில் சருமநோய் நிபுணர் சிகிச்சைக்கு ஏற்பாடு
### யாழ். எம்.பி. நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சருமநோய் சிகிச்சை நிபுணர் மீண்டும் யாழ். ஆஸ்பத்திரியில் மாதத்தில் இரண்டு தடவைகள் நோயாளர்களைப் பார்வையிடுவார்.

சருமநோய் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் வைத்திய நிபுணர் இன்றி அவதியுற்றமை கருதி யாழ் எம். பி. திரு வி யோகேஸ்வரன் எடுத்த நடவடிக்கையின் பயனாகவே இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக திரு. யோகேஸ்வரன் சுகாதார சேவைகள் அதிபர் டாக்டர் ஜேசுதாசன், சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. பீ. சி. பெரேரா, சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா ஆகியோருடன் தொடர்புகொண்டதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டின்படி வைத்திய நிபுணர் எம். நடராஜா இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை 2 நாட்களுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிடுவார்.

இம்மாத இறுதிக்குள் இம்முறை அமுலுக்குவரும். (கா-இ)

## யாழ். பழைய பூங்காவில் ஆயுள்வேதமூலிகைவளர்ப்பு

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலியில் ஆரம்பித்திருக்கும் மூலிகை உற்பத்தியை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் 'வேல்ட் விஸ்ஸன் இன்டர்நேசனல்' நிறுவனம் வழங்கிய 25 ஆயிரம் ரூபாவையும் பயன் படுத்தி யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் இரண்டு ஏக்கர் நிலத்தில் மூலிகை வளர்ப்பை ஆரம்பிப்பது என்றும் இம்முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் கிளிநொச்சி, வவுனியா, ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிப்பது என்றும் வட இலங்கை சித்த மருத்துவ சம்மேளனத்தின் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வைத்திய சிரோன்மணி எஸ் பி. ஈ. இன்னாசித்தம்பி தலைமையில் லங்கா ஆயுள் வேதக் கலாரிமண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு சமன்தலங்கா ஆயுள்வேத காங்கிரஸ் சார்பில் அளிக்கப்படும் விருந்து உபசாரவைபவத்திற்கு, சம்மேளனத்தின் சார்பில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து எண்மர் தெரிவாகினர்.

வடக்குமாகாணத்தின் பிரச்சனைகள், குறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் பொருட்டு யாழ் அரசாங்க அதிபரின் அழைப்பின் பேரில் தென் இலங்கையில் இருந்து இங்கு வரும் பத்திரிகையாளர்களுடன் எதிர்வரும் 25ம்

[6-ம் பக்கம் பார்க்க]

'டுவிஸ்ட்டில்'

# உலக சாதனையை நிலைநாட்ட கிளிநொச்சியில் முயற்சி

(யாழ்ப்பாணம்)

"டுவிஸ்ட்' நடனத்தில் உலக சாதனையை நிலைநாட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞரான ஜி. ஞானராசா முயற்சியெடுத்துள்ளார்.

ஏப்ரல் 2-ம் தேதி கிளிநொச்சி முற்றவெளி மைதானத்தில் இவர் 'டுவிஸ்ட்' நடனத்தை ஆரம்பிக்கவிருக்கிறார்.

டுவிஸ்ட் நடனத்தில் அமெரிக்க இளைஞர் நிலைநாட்டிய உலக சாதனையை 128 மணி நேரம் ஆடி ஆழிக்குமரன் ஆனந்தன் நிலைநாட்டினார். பின் 129 மணி நேரம் ஆடி ரோகன செனிவிரத்தின உலக சாதனையை நிலைநாட்டினார். யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த ஜனுமி பரீநஸீர் உலகசாதனையை நிலைநாட்ட முயற்சித்து 115 மணி நேரம் ஆடி, முயற்சியை நிறுத்திக்கொண்டார். பாண்டிருப்பில்நவரத்தினம் என்ற இளைஞர் 3 தினங்கள் ஆடியபின்னர் முயற்சியை இடையில் நிறுத்திக்கொண்டார். ஏப்ரல் 2ம் தேதி ஞானராசா கிளிநொச்சியில் உலகசாதனையை நிலைநாட்ட முயற்சிப்பார். [க]

[சுழிபுரம்]

பட்டப்பகலில் இளம் ஆசிரியை ஒருவரின் கழுத்துச்சங்கிலியை அறுக்க முயன்றதாகக் கூறப்படும் வாலிபர் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள ஒழுங்கையில் வைத்து ஆசிரியையான செல்வி எஸ். மாரிமுத்து என்பவரின் சங்கிலியை இந்த வாலிபர் அறுக்க முயன்றாராம்.

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த செல்வி எஸ். மாரிமுத்து தொல்புரம் கொட்டையாவத்தையிலுள்ள

# இளம் ஆசிரியையின் சங்கிலியை அறுக்க முயற்சி

## பிடிபட்டவர் பொலிஸில்

சிறுவர் பாடசாலையொன்றில் ஆசிரியையாகக் கடமையாற்றி வருகின்றார். நேற்று வழமைபோல் பாடசாலைக்குச் சென்ற ஆசிரியை விக்ரோறியாக் கல்லூரியைத் தாண்டி முன்ஒழுங்கையால் சென்றுகொண்டிருக்கையில் ஒருவாலிபர் சைக்கிள் வண்டியில் வந்து ஆசிரியையின் கழுத்திலிருந்த தங்கப் பவுண் சங்கிலியை அறுத்தாராம், உடனே ஆசிரியை சத்தம்போட்டு குளறிய போது அவ்வேளை பக்கத்து வளவிலுள்ள பனையில் கள்ளு இறக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த சீவல் தொழிலாளி எஸ். கந்தையா வேகமாக இறங்கி வந்து அவ்வாலிபனை பிடித்துக் கொண்டாராம் உடனடியாக வேறுசிலரும் உதவிக்கு சேர்ந்துகொண்டனராம். பிடிபட்ட வாலிபர் சங்கானைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். பொலிசாரிடம் அவ்வாலிபனின் சைக்கிள் வண்டியும் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற ஒழுங்கையில் வேறுசிலரது சங்கிலிகள் அறுக்கமுயன்ற சில சம்பவங்களும் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# தோட்டப்பாடசாலை நிலைமையை ஆராய்வார்

[கொழும்பு]

கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரட்ண சிறுகைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானின் விருந்தினராக நுவரெலிய மாவட்டத்தில் தங்கியிருந்து தோட்டப்பகுதி பாடசாலைகளில் நிலைமைகளை ஆராய்வார்.

ராஜா தோட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளை ஒன்றிணைத்து தனிப்பாடசாலையாக அமைக்கும் திட்டமொன்றுக்கான அடிக்கல்லையும் கல்வி அமைச்சர் நாட்டுவார். (ம)

# பத்திரிகையாளர் கோஷ்டி

## வடபகுதி விவசாயிகளை சந்திக்கும்

[உடுப்பிட்டி]

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் விசேட அழைப்பின் பேரில் வடபகுதிக்கு விஜயம் செய்யும் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களைக் கொண்ட கோஷ்டியினர் வடபகுதி விவசாயிகளை நேரில் சந்தித்து உரையாடவுள்ளனர்.

இதற்கு முன்னோடியாக வடபகுதி விவசாயிகள் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி காலை புத்தூர் கமநலச் சேவை நிலையத்தில் கருத்தரங்கு நடைபெறுமென்று புத்தூர் கமநலச் சேவை நிலையப் பகுதிப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு எஸ். இராஜகோபாலன் தெரிவித்துள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. சொக்கலிங்கம் கிராம சேவை அலுவலர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் உட்பட பல அரசாங்க அதிகாரிகளும் விவசாயிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இரணைதீவு கொலை வழக்கு

[யாழ்ப்பாணம்]

இரணைதீவு கொலை வழக்கு, யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் நேற்று மூன்றாவது தினமாக நடைபெற்றது. இன்று விசாரணை தொடர்ந்து நடைபெறும். [க]

## அமிர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கௌரவித்து சிறப்புக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மீண்டும் திரு அமிர்தலிங்கம் தம்பதிகள் 25ம் திகதி சென்னை திரும்புவர். அன்று மாலை சென்னையில் நடைபெறும் வரவேற்புக்கூட்டத்தில் உரையாற்றுவார். 26ம் தேதி தஞ்சையிலும், 27ம் தேதி திருச்சியிலும், 28ம் தேதி அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம், பாண்டிச்சேரி, விழுப்புரம் ஆகிய மாநிலங்களிலும், 29ம் தேதி சென்னையிலும் பொதுவரவேற்புகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

அமிர் தம்பதிகள் இம்மாதம் 30ம் திகதி இலங்கை திரும்புவர். [கெ]

## பெற்றோல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் தலைமையில் கூடியபோது இந்தமுடிவு எடுக்கப்பட்டது. இதற்காக ஆரம்ப முதலாக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட பஸ்நிலையத்தை இ. போ. ச. கட்டிக்கொள்ளும் என்றும் பாதிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டிடங்களை நீதியமைச்சே கட்டிக் கொள்ளும் என்றும் தெரிகிறது. [ம]

# திருடர்கள் தொல்லை

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டையில் இரவு நேரங்களில் மட்டுமன்றி பகல் நேரங்களிலும் திருட்டுச் சம்பவங்கள் தலைதூக்கி வருகின்றன.

# சந்தேக நபர்கள் எவரும்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸைச் சேர்ந்த சுமார் 100 ஆயுதந்தாங்கிய பொலிஸார் சுற்றிவளைத்துக் காவல் செய்தனர்.

சந்தேகநபர்களான அ. அருணகுலேந்திரன் [யாழ்ப்பாணம்], வ. ராஜ்குமார் [உடுப்பிட்டி]. கே. தெய்வேந்திரம் [சாவகச்சேரி], க. சண்முகலிங்கம் [வரணி], வி. நடராசா [சாவகச்சேரி], அ. சின்னத்துரை அல்லது தம்பு [மீசாலை], கே. யோகராசா [கொடிகாமம்], வி. தங்கராசா [யாழ்ப்பாணம்], அந்தோனி ஜேசுராசா [பருத்தித்துறை] ஆகியோர் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர்.

### 4 கொள்ளைச் சம்பவங்கள்

சங்கானை-சாவகச்சேரி 129 ரூபா 60 சதம் கொள்ளை, வேலணை தீவு-யாழ்ப்பாணம் பஸ் 127 ரூபா 90 சதம் கொள்ளை, வேலணை தீவு பஸ்ஸில் வைத்து பூநகரி ப. நோ. கூ. சங்க 18,090 ரூபா கொள்ளை, புலோலி ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலைய 430 ரூபா கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக இந்த அடையாள அணிவகுப்புகள் நடைபெற்றது.

### புலோலிச் சம்பவம்

புலோலி ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலைய கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பில் சந்தேகநபரான அந்தோனி ஜேசுராசா நிறுத்தப்பட்டார். இந்த அணிவகுப்பில் சாட்சிகளாக முனியாண்டி ரகு, செ. விக்கினேஸ்வரன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். எவரும் அடையாளம் காட்டவில்லை.

### மற்றும் 3 சம்பவங்கள்

மற்றும் 3 பஸ் கொள்ளைகள் தொடர்பாக கொடிகாமம் ப. நோ. கூ. சங்க கொள்ளை தொடர்பாக கைதான 8 சந்தேகநபர்கள் நிறுத்தப்பட்டனர். சாட்சிகளாக பஸ் சாரதிகள், கண்டக்டர்கள், பிரயாணிகள் அழைக்கப்பட்டிருந்தனர். எவரும் அடையாளம் காட்டவில்லை.

### சட்டத்தரணி ஆட்சேபம்

புலோலி ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலைய கொள்ளை சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், சந்தேகநபர் யாழ். கிங்ஸ்கவுஸில் சாட்சிகளுக்கு அடையாளம் காண்பிக்கப்பட்டதால், இந்தஅடையாள அணிவகுப்பு செல்லுபடியாகாதென ஆட்சேபம் தெரிவித்தார்.

பஸ் கொள்ளைகள் தொடர்பான சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி எஸ். பி. மயில்வாகனம் சட்டத்தரணி வி. பாலசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்

### பிணையில்விட கோரிக்கை

சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணிகள் பதில் நீதிபதியிடம் கோரினார்கள்.

நீதிபதி இதுபற்றி அடுத்த தவணையின்போது தீர்மானிப்பார் என்று தெரிவித்த பதில் நீதிபதி எஸ். கே. திரவிரநாயகம் சந்தேக நபர்களை ரிமாண்டில்வைக்க உத்தரவிட்டு, ஏப்ரல் 3ம் தேதிவரை ஒத்திவைத்தார். (க)

## யாழ். பழைய...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

திகதி பிற்பகல் சம்மேளனத் தலைவரின் இல்லத்தில் உரையாடல் ஏற்பாடு செய்தல்

அரசாங்க அதிபரும், பத்திரிகையாளர்களும் கலந்து கொள்ளும் இவ்வுரையாலின்போது ஒவ்வொரு சித்த வைத்தியர் சங்கத்தின் சார்பிலும் ஐந்து பேராவது கலந்து கொள்ள வேண்டும். கிழைத்தேச சுதேச வைத்தியர்களின் குறைகள் அரசியல், சமூக, கல்வி, தரப்படுத்தல் பற்றி குறைபாடுகளை, அபிப்பிராயங்களை ஆதாரங்களுடன் தெரிவிக்க வேண்டும். [கு-இ]

# விபத்தில் சிக்கிய மாணவன்

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணையில்நடந்த லொறி - சைக்கிள் விபத்தில் காயமடைந்த மாணவன் மயக்கமடைந்த நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மாணவனான சிவானந்தன். நண்பகல் வீட்டிற்கு சென்றபின் சைக்கிளில் வித்தியாலயம் திரும்பிக்கொண்டிருந்தபோது இவ்விபத்து நடந்தது.

வித்தியாலய அதிபர் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து மாணவனை யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றார்.

18ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இம்மாணவனுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை, தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. [கை]

# "ஆசிரியர்களுக்கு சேவை மனப்பான்மை வேண்டும்"

[அரியாலை]

"ஆசிரியர் சேவையை மேற்கொள்பவர்கள் கடமை, கண்ணியம், சேவைமனப்பான்மை கொண்டவர்களாக விளங்க வேண்டும். தம்மிடத்தில் கல்வி கற்கவரும் பிள்ளைகளை நாட்டின் சிறந்த பிரஜைகளாக்கும் பொறுப்பு அவர்களுடையதாகும். ஒருகல்லூரியின் பெருமை அங்கு கல்விகற்கும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளைக்கொண்டு மாத்திரம் அல்ல, அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் - மாணவர்களிடையே இருக்கும் நல்லுறவுகளைக் கொண்டும் கணிக்கப்படுகிறது சேவையிலிருந்து இளைப்பாறும் திருமதி நதானியல், செல்வி தம்பிராசா, திரு ஞானப்பிரகாசம் ஆகியோர் தமது சேவைக்காலத்தில் ஆற்றிய சேவைகளுக்கும், மாணவர்களின் கல்விவளர்ச்சியில் அவர்கள் ஆற்றிய சிறந்த பணிகளுக்கும் பரியோவான் கல்லூரியின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்"

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா கல்லூரி பீற்றே ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர்களின் பிரிவுபசார வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் சார்பில் திரு. வே. சிவசுப்பிரமணியமும், மாணவர்கள் சார்பில் செல்வன் சஞ்சயனும் பிரிவுபசாரப் பேச்சுகளை நிகழ்த்தினார்கள். தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்குஆசிரியர்கள் நன்றி தெரிவித்தனர். ஆசிரியர் மாணவர்கள் சார்பில் ஆசிரியர்களுக்கு பணமுடிப்புகள் வழங்கப்பட்டது.

# நாவந்துறையில் கயரோக தடுப்புச்சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சபையின் யாழ்ப்பாணக் கிளையினர், நாவாந்துறைப் பகுதியில் கயரோகத் தடுப்பு வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சபையினர் கயரோகத் தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தும்பொருட்டு 40 பெண் தொண்டர்களைத் தெரிவுசெய்துள்ளனர். பயிற்சிபெற்ற இவர்கள், இப்பகுதியிலுள்ள சகல வீடுகளுக்கும் நேரில் சென்று, கயரோகத் தடுப்பு ஊசி பெறாத 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் பெயர்களையும், கயரோக அறிகுறி உடைய ஏனையோரின் பெயர்களையும் திரட்டியுள்ளனர்.

தடுப்பூசி பெறாதவர்களுக்கு தடுப்பு மருந்து, நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை நாவாந்துறை சென். மேரிஸ் பாடசாலையில் கொடுக்கப்படும். இதனுடன் கயரோக அறிகுறி காணப்படுவோருக்கும் வைத்திய உதவிகள் அளிக்கப்படும்.

தொண்டர்கள், தடுப்பூசி பெறாதவர்களையும், கயரோக அறிகுறி உடையவர்களையும் இந்நிலையத்திற்குச் சமூகமளிக்கச்செய்வார்கள்.

பண்ணை மார்புநோய்சிகிச்சை நிலைய அதிகாரியான டாக்டர் சி. இந்திரராஜா தலைமையில் திருவாளர்கள் சு. இ. சரவணபவன், கே. சிவலிங்கம், கு. நடராஜன், சங்கைக்குரிய சகோதரி கபிரியேல் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் (சொக்-திரு)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaad. P B N: 49. Telegram: Eelanaadu. Telephone: 389.